DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.12

| | |
|---|---|
| Name | : Poongulazhi |
| Father’s Name | : Samraj |
| Age | : 56 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 16th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் எண் 6/19 சி.கே தெரு அயனாவரம் சென்னை–23 என்ற முகவரியில் கடந்த 12 வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு நித்தியராஜ் என்ற மகனும், பவித்ரா என்ற பெண்ணும் உள்ளனர். எனது மகன் நித்தியராஜ் முதலில் ஏர்டெல் நிறுவனத்தில் வேலை பார்த்தார். மாதம் ரூ.7000 சம்பாதித்தார். அயனாவரம் கே–2, காவல் நிலையத்தில் தாமஸ் என்ற காவலர் இருந்தார் அவர் என் மகனை FOP சேர்த்துவிட்டார். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர். என் மகன் நித்தியராஜ்க்கு திருமணம் ஆகிவிட்டது. எனது மருமகள் பெயர் சங்கீதா அவருக்கு சஞ்சனா என்ற பெயரில் ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் அயனாவரம் நுார் ேஹாட்டல் அருகே டிபன் கடைபோட்டு நடத்தி வருகிறேன். 11.01.2012 அன்று இரவு 8 மணியளவில் என் மகன் நித்தியராஜ் வந்து என்

கடையில் இட்லி சாப்பிட்டுவிட்டு மனைவிக்கு இட்லி வாங்கி கொண்டு போனார். அதன்பிறகு நான் பார்க்கவில்லை.

காலையில் நித்தியராஜ் மனைவி என் மகள் கல்லூரிக்கு செல்லும்போது வந்து உங்க அண்ணன் வரவில்லை என்று கூறினார். போன் சுவிட்ச் ஆப் ஆகியிருந்தது. நான் 1 மணி வரை எல்லா இடங்களிலும் தேடினேன். நித்தியராஜ் உடன் பணிபுரியும் ராஜா என்பவர் என்னிடம் நித்தியராஜை ஐசிஎப் கே-7 காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக சொன்னார். நான் மாலை 5 மணியளவில் அந்த காவல் நிலையம் சென்று பார்த்தேன் அங்கு என் மகனின் மோட்டார் சைக்கிள் இருந்தது. நான் என் கணவர் என் பெண், எனது 2 அக்கா, அக்காவின் மகள் பத்மினி, லோகு, டில்லிபாபு ஆகியோர்கள் சென்றிருந்தோம், அங்கு போலீசாரிடம் கேட்டோம். எங்கள் யாரையும் நித்தியராஜை பார்க்கவிடவில்லை.

என் அக்காவின் மருமகன் குமார் என்பவர் பட்டாளி மக்கள் கட்சியில் உள்ளார் அவர் மட்டும் போய் பார்த்தார். அப்பொழுதுகூட என் மகன் ஜீஸ் கேட்டதாக எடுத்துச் சென்று கொடுத்தார் அந்த ஜீஸை கூட அவர் குடிக்கவில்லை. நல்ல அடிச்சிருக்கிறாங்க அவரால் எழுந்திருக்ககூட முடியவில்லை என்று கூறினார். 3 நாட்கள் நாங்கள் போய் பார்த்தோம் எங்களை பார்க்கவிடவில்லை. விசாரணைக்கு அழைத்து போயிருப்பதாக சொன்னார்கள். 14.01.2012 அன்று சிறைக்கு அழைத்து செல்லுவதாகவும் உடைகளை எடுத்துவரும்படி போலீசார் கூறியதாக என் கணவர் கூறினார். நான் 13.01.2012 அன்று முதலாவது எதிரி ராமலிங்கம் ஐயாவிடம் நான் உங்கள் காலில்கூட விழுகிறேன் அவர் எந்த தப்பு செய்திருந்தாலும் விட்டுவிடுங்கள் இப்போதான் குழந்தை பிறந்திருக்கிறது என்று சொன்னேன். அதற்கு ராமலிங்கம் நான் நல்ல பாம்பு விடமாட்டேன்

செய்கிறத்தான் செய்வேன் என்று கூறினார். 14.01.2012 அன்று உடைகளை எடுத்து செல்வதற்கு முன் போலீசார் அவரை சிறைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். 15.01.2012 அன்று நாங்கள் பார்க்க போனபோது மனுபோட்டுதான் பார்க்க வேண்டும் என்று கூறினார்கள். 16.01.2012 அன்று மதியம் நித்தியராஜ் சீரியசாக இருப்பதாகவும், ராயப்பேட்டை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவருவதாகவும் கூறினார்கள். அதன்பிறகு நாங்கள் ராயப்பேட்டை மருத்துவமனை செல்வதற்குள் நித்தியராஜ் இறந்துவிட்டார். 17 ம் தேதி நாங்கள் மறியல் செய்தோம்.

ஷேசாத்திரி என்ற ஆணையர் இதற்கு நியாயம் வாங்கித் தருவதாகவும் மறியலை வித்டிரா செய்யுங்கள் என்று கூறினார். 17 ம் தேதி எனது கணவரை காலில் எட்டி உதைத்து இந்த பிணத்தை எடுக்கவில்லை என்றால் ஆனாதை பிணமாக போட்டிடுவேன் என்று போலீசார் கூறினார்கள் அதனால் என் கணவர் பயந்து 18 ம் தேதி பிணத்தை எடுத்துவந்து கல்லறையில் அடக்கம் செய்துவிட்டோம். என் மகனின் இறப்பிற்கு நியாயம் வழங்க வேண்டுகிறேன். இது சம்மந்தமாக என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது அக்கா மருமகன் குமரன் என்னிடம் காவல் நிலையத்தில் நித்தியாவை போலீசார் அடித்திருந்தார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 நாட்கள் காவல்நிலையம் சென்றதாக என்னிடம் நித்தியராஜை காண்பிக்கவில்லை என்றும் நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 11.01.2012 அன்று எனது மகனை போலீசார் அழைத்து செல்லவில்லை என்றால் அதுபற்றி நான்

சொல்லவில்லை. 12ம் தேதியிலிருந்துதான் என் மகனை காணவில்லை என்று தேடினேன். 12ம் தேதி என் மகனை போலீசார் அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது நான் "13.01.2012 அன்று முதலாவது எதிரி ராமலிங்கம் ஐயாவிடம் நான் உங்கள் காலில்கூட விழுகிறேன் அவர் எந்த தப்பு செய்திருந்தாலும் விட்டுவிடுங்கள் இப்போதான் குழந்தை பிறந்திருக்கிறது என்று சொன்னேன் என்றும் அதற்கு ராமலிங்கம் நான் நல்ல பாம்பு விடமாட்டேன் செய்கிறத்தான் செய்வேன் என்று கூறினார்" என்று கூறவில்லை என்றால் சரியல்ல. 16.01.2012 அன்று சிறையிலிருந்து என் மகன் சீரியசாக இருப்பதாக சிறையிலிருந்து போன் வந்ததாக போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. என் மகன் FOP ஆக இருந்தபோது 1மாதம் விடுப்பில் இருந்தாரா என்றால் இல்லை. என் மகன் அந்தப் பகுதியில் போலீஸ் என்றுகூறி அங்கு வரும் பெண்களிடமும், காதலர்களிடமும், செல்போனை புடுங்குவதும், மிரட்டுவதுமாக இருந்தார் என்றால் சரியல்ல. 12.01.2012 அன்று இரவு தினேஷ் என்ற பையனும் அவரது காதலியும் காஞ்சனாவும் பேசிக் கொண்டிருந்தபோது என் மகன் அவரிடம் செல்போனை பிடிங்கினார் என்றால் சரியல்ல. அதனால் அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் தினேஷ் வகையரா அவரை அடித்தார்கள் என்றால் சரியல்ல.

அப்போது கே–7 ஐசிஎப் காவல்நிலைய உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா அங்கு பேட்ரோல் வாகனத்தில் வந்து என் மகனை அடித்துவிரட்டிவிட்டார் என்றால் சரியல்ல. 13.01.2012 அன்றுதான் தினேஷ் வகையரா ஒப்படைத்த என் மகனை கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. 13.01.2012 அன்று என் மகனை கைதுசெய்தபோது என் கணவரிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான்

**சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |